**Academic Research News**
*Peer-Reviewed Journal*

**கல்வி ஆராய்ச்சி செய்திகள்**
**(Kalvi Ārāycci Ceytikaḷ)**
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*

**Volume 1, Issue 2, December 2023** **E-ISSN – XXXX-XXXX**



# பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் கல்வியியல் சிந்தனைகள்
# Educational Thoughts in *Pathinenkeelkanakku* Books

**முனைவர் வெ. சிங்கராஜா**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அன்னை பாத்திமா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருமங்கலம்.
**Dr V. Singaraja,** Assistant Professor of Tamil, Annai Fathima College of Arts and Sciences, Thirumangalam.
**ORCiD**: https://orcid.org/0000-0002- 5235-5888

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழ் மொழியில் படைக்கப்பட்ட இலக்கியங்கள் தொன்மையானவை; பண்பட்டவை; வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. என்று தோன்றியது, வளர்ந்தது என்று இயம்ப முடியாத அளவிற்குப் பழமையானவை. பிற நாட்டினர் நாகரிக நிலையை எட்டாத காலத்திலேயே தனக்கேயுரிய கலப்பற்றத் தூய இலக்கியப் போக்கினை கொண்டு விளங்கியது. இப்படிப்பட்ட தமிழ் இலக்கியங்களில் கல்வியின் இன்றியமையாமை பற்றி எடுத்துக்கூறும் இலக்கியங்கள் எண்ணற்றவையாகும். அவற்றிலும் குறிப்பாக சங்க மருவிய கால இலக்கியங்களான பதினெண் கீழ்கணக்கு நூல்களில் கல்வியியல் சிந்தனைகள் பொதிந்து கிடக்கின்றன. இச்சிந்தனைகள் தோன்றிய காலம் முதல் இன்றுவரை மட்டுமல்ல, இனிவரும் காலங்களிலும் இந்தச் சமுதாயம் பண்பட்ட நாகரிகத்தைக் கொண்டு வாழ்வதற்குத் தேவையான கருத்துக்களைக் கொண்ட களஞ்சியமாகும். ஆதலால் ''பதினெண் கீழ்கணக்கு நூல்களில் கல்வியியல் சிந்தனைகள்'' என்னும் பொருண்மையில் கல்வியியல் தொடர்பான சிந்தனைகளும், கல்வியினால் பண்பட்ட நிலையினை எய்திய மக்களின் வாழ்வியல் விழுமியங்களையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

**கருச் சொற்கள்:** பதினெண்கீழ்கணக்கு, நூல், கல்வியியல் சிந்தனைகள்.

**முன்னுரை**

அளவில் குறைவான அடிகளைப் பெற்று, அறம், பொருள், இன்பம் என்னும் பொருளில் பாடப்பெற்றவை கீழ்கணக்கு நூல்களாகும். எட்டு அடிகள் தொடங்கி ஆயிரம் அடிகள் வரை பாடப்பெற்றவை மேற்கணக்கு நூல்கள் ஆகும். ஆனால் இரண்டு அடிகள் எட்டு அடிகள் வரை பாடப்பெற்ற கீழ்கணக்கு நூல்களில் அறநூல், அகநூல், புறநூல் பிரிக்கப்பட்டு அமைந்துள்ளன. இன்நூல்களில் இளமையிற் கல்வி, மேன்மைக் கற்றல், கல்வியின் சிறப்பு, கற்றோர் அருமை கற்றோர் அறிதல், கற்றார் நலத்தை கற்றார் உணர்தல், கற்றார் அடக்கம், கற்றார் மேன்மை என எண்ணிலடங்கா கல்விச் செய்திகள் இடம் பெற்றுள்ளன. ஆகவே

**Academic Research News**
*Peer-Reviewed Journal*

Academic Research News
Development relies in Research

கல்வி ஆராய்ச்சி செய்திகள்
(Kalvi Ārāycci Ceytikaḷ)
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*

Volume 1, Issue 2, December 2023 E-ISSN – XXXX-XXXX



பதினெண்கீழ்கணக்கு நூல்களில் கல்வியியல் சிந்தனை என்ற தலைப்பில் இக்கட்டுரை அமைகிறது.

**நாலடியாரில் கல்வி**

எண்ணாயிரம் சமண முனிவர் பஞ்சத்தின் காரணமாகப் பாண்டிய நாட்டில் வந்து வாழ்ந்தனர். பிறகு அவர்தம் நாடு பஞ்சத்தினின்று நீங்கிவிட்டது. ஆதனால் நாங்கள் எங்களது நாட்டிற்குச் செல்கிறோம் எங்களை வழியனுப்பி வையுங்கள் என்று அவர் கேட்டனராம். பாண்டி மன்னன் அனுப்பி வைக்காததனால் எண்ணாயிரம் பேரும் ஆளுக்கு ஒரு வெண்பா எழுதித் தமது இருக்கையில் வைத்துவிட்டுச் சென்றுவிட்டனர் என்றும், அதன் பிறகு அவற்றைச் சேகரித்து வைகை ஆற்றில் விட்டபோது சரியாக நானூறு வெண்பாக்கள் மட்டும் சரியாக நான்கு அடிகள் மட்டும் சென்று நின்றுவிட்டனவாம் என சிறப்புப் பெற்ற நாலடியார் நூலில் கல்வியின் சிறப்பு பற்றி பேசப்படுகின்றன.

மயிர் குடியினழகும், வளையும் படியான ஆடையினது கரையழகும், பூச்சினது அழகும், அழகு அல்ல, மனத்தில் யாம் நல்வர்களாகயிருக்கக் கடவோ மென்கிற நடுவு நிலைமையைத் தருதலால் கல்வியினால் உண்டாகின்ற அழகே அழகாகும் என்பதை

**குஞ்சி யழகும் கொடுத்தானைக் கோட்டழம்**
**மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து**
**நல்லயாம் என்னும் நடுவு நிலைமையால்**
**கல்வி அழகே அழகு (நாலடியார் - 131 )**

இந்த பாடல்வழி அறிய முடிகிறது.

கல்விகள் முடிவில்லாதன. கற்பவர்களுடைய வாழ்நாள்கள் சில, பொறுத்து யோசித்தால் கற்பவர்களுக்கு அநேகம் வியாதிகளுளவாம். நீரை நீக்கில் பாலையே உண்கின்ற அன்னப் பறவைப் போல் நூல்களை அறிந்து விவேகத்தினால் அமைவுடையே தமக்குப் பொருந்தினவைகளைக் கற்பார்கள் என்ற கருத்தினை,

**கல்வி கரையில ! கற்பவர் நாள்சில**
**மெல்ல நினைக்கின் பிணிபல – தௌ;ளிதின்**
**ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்**
**பாலுண் குருதின் தெரிந்து (நாலடியார் - 135 )**

ஒலிக்கின்ற கடலினது குளிர்ச்சியாகிய துறையையுடையானே. நூல்களைக் கற்று அவற்றின் சாரத்தை யறிந்தவரது சிநேகமானது நுனியிலிருந்து கரும்பைத் தின்றது போலாம். குணமில்லாத சார மற்றவர்களுடைய சிநேகமானது,

**கனைகடல் தண்சேர்ப்ப ! கற்றறிந்தார் கேண்மை**
**நுணியின் கரும்புதின் றற்றே! – நுணிநீக்கித்**
**தூநின்தின் றன்ன தகைத்தரேபா பண்பிலா**

**Academic Research News**
*Peer-Reviewed Journal*

கல்வி ஆராய்ச்சி செய்திகள்
(Kalvi Ārāycci Ceytikaḷ)
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*

Volume 1, Issue 2, December 2023 E-ISSN – XXXX-XXXX



**ஈரமி லானர் தொடர்பு (நாலடியார் 138)**

நுனியைத் தள்ளி வேரிலிருந்து தின்றதையொத்த தன்மையை யுடையது என்று கல்வியின் தன்மையை விளக்குகின்றது.

**திருக்குறளில் கல்வி**

திருக்குறள் நீதி நூல்களுள் முதலிடம் பெற்றச் சிறப்பானது. தொல்காப்பியத்தில் குறுவெண்பாட்டு, நெடுவெண்பாட்டு என்று குறிப்பிட்டுள்ளார் தொல்காப்பியர். குறுவெண்பாட்டுதான் குறள் பாட்டு என்று ஆகித் திரு அடைமொழி பெற்றுத் திருக்குறள் என்று பெயர் பெற்றுள்ளது.

திருவள்ளுவர் காலத்திலும் அவருக்கு முன் காலத்திலும் நான்கு அடி, எட்டடி, பலவடி என்று எழுதிக் கொண்டிருந்தனர். திருவள்ளுவர் ஒருவர்தாம் இரண்டே அடியில் குறைத்து எழுதிடுதல் வேண்டும் என்று ஒரு புதுமையினைச் செய்தார்.

அனைவரும் ஆண்டு கொண்டிருக்கின்ற அரசனையும் ஆண்டவசனையும் பாடிக்கொண்டிருந்த காலத்தில் மக்களைப் பற்றிப் பாடுதல் வேண்டும் என்று சிந்தித்த ஒரே புலவர் திருவள்ளுவரே.

திருக்குறள்ன புத்த, சமண, சைவ, வைணவ, கிறித்துவ, இஸ்லாமிய மதங்களுக்கு ஆதரவான கருத்துக்களும் உள்ளன. அதே நேரத்தில் இந்த மதங்கள் அனைத்துக்கும் எதிப்பான கருத்துகளும் உள்ளன. திருவள்ளுவர் எந்த மதத்தினுள்ளும் அடங்காதவர். எந்த மதத்திற்குள்ளும் அடக்கமுடியாதவர்.

திருக்குறள் ஒரு கண்ணாடி, அதனால் அதில் யார் முகம் பார்க்கின்றாரோ அவரது முகம் தெரிகிறது. நாடு, மொழி, இனம், எல்லை, காலம், கடவுள், மதம், சாதி அனைத்தையும் கடந்த நூல் என்று தமிழில் உண்டு என்றால் அது திருக்குறள் ஒன்றுதான்.

அதாவது அரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல், அவையாவன அறநூலும், நீதி நூலும், யானை, குதிரை, தேர் படைக்கலம் என்னும் இவற்றின் நூல்களும் முதலாயின அரசன் அறிவுடையன் ஆயக்கால் தன்னுயிற்கே அன்றி மண்ணுயிர்கும் பயண்படுதல் நோக்கி இது அரசியலுள் வைக்கப்பட்ட தாயினும், யாவர்க்கும் உறுதி பயத்தள் சிறப்புடைமையின் பொதுப்படக் கூறுகின்றார். மேலும்,

**தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்**
**நீங்கா நிலனாள் பவற்கு (குறள் எண் 769)**

எனத் தோற்றுவாய் செய்த மாட்சியை விரித்துக் கூறுகையில் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்தியம்பியுள்ளார் திருவள்ளுவர். மேலும் கல்வியின் சிறப்பினை,

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக (குறள் எண் 391)**

**எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு (குறள் எண் 392)**
**கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையார் கல்லா தவர் (குறள் எண் 393)**
**உடையார்முன் இல்லார்பேல் ஒக்கற்றுங் கற்றார்**
**கூடையரே கல்லா தவர் (குறள் எண் 395)**
**தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு (குறள் எண் 396)**
**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்**
**கெழுமையும் ஏமாப் புடைத்து (குறள் எண் 398)**

ஒருவன் கற்கும் நூல்களைப் பழுதறக் கற்க வேண்டும். அங்ஙனம் கற்றால் அக் கல்விக்குத் தக அவை சொல்லுகின்ற நெறிக் கண்ணே நிற்க வேண்டும். அறியாதார் எண் என்று சொல்லுவனவும் மற்ற எழுத்து என்று சொல்லுவனவும் ஆகிய கலைகள் இரண்டினையும் அறிந்தார் சிறப்புடை உயிர்கட்குக் கண் என்று சொல்லுவர்.

கற்றோர்கே கண் உண்டு. கல்லாதவர்கோ முகத்தில் இரண்டு புண் உண்டு எனக் கூறுகின்றார். "பிற்றை நிலை முனியாது கற்றல் நன்று" (புறம் -183) ஆதலான். சேல்வர்முன் நல் கூர்நதார் நிற்குமாறு போவித் தாமும் ஆசிரியர் முன் ஏக்கற்றும் கற்;றார் தலையாயினார். அந்நிலைக்கு நாணிக் கல்லாதவர் அஞ்ஞான்றும் இழிந்தாரே யாவர் என எடுத்தியம்புகிறார்.

மணலின்கண் கேணி தோண்டிய அளவிற்றாக ஊறும். அதுபோல மக்கட்கு அறிவு கற்ற அளவிற்கு ஊறும். ஒருவற்கு தான் ஒரு பிறப்பின்கண் கற்ற கல்வி எழு பிறப்பின்கண் கல்வி எழு பிறப்பினும் சென்று உதவுதலை உடைத்து என்று இயம்பும் வகையில் தெய்வம் புலவர் திருவள்ளுவர் கல்வியின் சிறப்பை எடுத்துக் கூறியுள்ளார்.

**பழமொழி நானூற்றில் கல்வி**

புழமொழி நானூறு ஒவ்வொரு வெண்பாவிலும் ஒவ்வொரு பழமொழியை இறுதியில் கொண்டு முடிகிறது. இத்துடன் ஒவ்வொரு வெண்பாவும் நீதியையும் நல்ல ஒழுக்கத்தையும் விளக்கிப் படைக்கப்பெற்றுள்ளது. இவற்றில் கல்வியின் மேன்மையும் அறிவுறுத்தப்படுகின்றன.

**ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்**
**போற்று மெனவும் புணருமோ? (பழமொழி 1045)**
**ஆற்றவும் கற்றார் அறிவுடையார், அக்துடையார்**
**நாற்றிசையும் செல்லாத நாடில்லை, அந்நாடு**
**வேற்றுநா டாகா, தமவேயாம் (பழமொழி 1047)**
**முற்றப் பகலும் முனியா துனிதேதிக்**

Academic Research News
*Peer-Reviewed Journal*

கல்வி ஆராய்ச்சி செய்திகள்
(Kalvi Ārāycci Ceytikaḷ)
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*

Volume 1, Issue 2, December 2023 E-ISSN – XXXX-XXXX



**கற்றலிற் கேட்டவே நன்:று (பழமொழி 1047)**
**புலமிக் கவரைப் புலமை தெரிதல்**
**புலமிக் கவர்க்கே புலனாம் (பழமொழி 1045)**
**நல்லார் நலத்தை உடையின் அனுநினும்**
**நல்லார் உணர்ப பிறகுணரார் (பழமொழி 1049)**
**கற்றறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார்**
**போச்சாந்து தன்மைப் புகழ்ந்துரைப்பர் - தெற்ற**
**ஆறைகல் அருவி அணிமலை நாட**
**நிறைகுடம் நீர் தளும்ப லி; (பழமொழி 1049)**

கற்கக் கூடிய இளமைப்பருவத்தில் கல்வி கற்காதவன் மூப்பு வந்த காலத்தில் கல்வியைக் கற்றுப் போற்றுவான் என்று சொல்லப்படுவதும் ஒருவருக்குக் கூடுமோ? ஏன இளமையிற் கற்றலைக் கூறுகின்றார்.

அறிவுடையராவர் மிகவும் கற்றவர். அக்கல்வியாலகிய அறிவினை உடையாருக்கும் சொல்லாத நாடு நான்கு இசையின் கண்ணும் இல்லை. சென்ற நாடுகள் வேன்று நாடுகள் ஆகா. தம்முடைய நாடுகளேயாம் என்று கல்வியின் சிறப்பு கூறப்படுகிறது. ஆகவே முன்றுரை அரையனார் பழமொழி நானூற்றுப் பலபாடல்களில் கல்வியின் சிறப்பை கூறியுள்ளதை நாம் அறியமுடிகிறது.

நான்மணிக் கடிகை நந்நான்கு வகையான நீதி மணிகளால் கோர்கப் பெற்ற ஒருவகை அணிகலன் போன்றது. நான்மணிக் கடிகையில் விளம்பிநாகனார் கல்வியைப் புகழ்ந்து பாடியுள்ளார் என்பதை,

**மனக்குப்பாழ் வான்நுத லின்மைதான் செல்லுந்**
**திசைக்குப்பாழ் நட்டோரை இன்மை இந்த**
**அவைக்குப்பாழ் மூத்தோரை இன்மை தனக்குப்பாழ்**
**கற்றறி வில்லா உடம்பி (நாலடியார் - 22)**
**திரியழல் காணில் தொழுப விறகின்**
**ஏரியழல் காணின் இகழ்ப – ஒருகுடியில்**
**கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றான்**
**இளமைபா ராட்டும் உலகு ( நாலடியார் - 66)**
**தேவ ரனையர் புலவருந் தேவர்**
**தமரனையர் ஓரூர் உறைவார் - தமருள்ளும்**
**பெற்றன்னர் பேணி வழிபடுவார் கற்றன்னர்**
**கற்றாரைக் காத லவர் (நாலடியார் - 71)**

Academic Research News
*Peer-Reviewed Journal*

கல்வி ஆராய்ச்சி செய்திகள்
(Kalvi Ārāycci Ceytikaḷ)
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*

Volume 1, Issue 2, December 2023 E-ISSN – XXXX-XXXX



மனைக்கும் பாழாவது மனையாளை யில்லாமை தான் போகும் ஊர்ப்புறங்கட்கு பாழாவது அவ்விடங்களில் நண்பர்பள் இல்லாமை பாலரும் கூடியிருந்த அவைக்குப் பாழாவது கல்வி. கேள்வி முதலியவற்றால் சிறந்த சான்றோரை இல்லாமை. பிறவியெத்த தனக்கு பாழாவது கல்வியறிவு பெறாத வெறும் பாலுடம்பு உள்ளமையாம் என பேசுகின்றார்.

திரியி எனரியுஞ் சுடரைக் கண்டால் அது சிறிதாயிருப்பினும் கைப்கூப்பி வணங்குவர். விறகிலே எரியும் சுடரைக் கண்டால் அது பெரிதாயிருப்பினும் உலகத்தார் மதிக்காதவர். ஒரே குடும்பத்தில் படியாமல் ஆண்டு முதிர்ந்து விட்டவனை மதியாமல் விடுத்துப் படித்தவனது இளமைப்பருவத்தையே உலகத்தார் பாராட்டுவர் என்று உயர்வாகக் கூறப்படுகின்றார் விளம்பிநாகனார்.

கல்வியறிவுடைய புலவர்களும் தேவருக்கு ஒப்பாவார்கள். அப்புலவர்கள் உள்ள ஊரில் வாழ்பவர்கள் அத்தேவர்களின் உறவினர்களுக்கு ஒப்பாவார்கள். அவ்வாறு உணர்ந்து உறவானவருக்கும் அப்புலவர்கள் விரும்பி வழிபட்டவர்கள் அவர்தம் அருள் பெற்றவரை ஒப்பர். புலவரைப் காதலித்து ஒழுகுபவர் அப்புலவரைப் ஒப்பர் கற்றவரே ஆவர். ஆகவே நான்மணிகடிகையில் விளம்பிநாகனார் பல இடங்களில் கல்வியின் மேன்மை பற்றி கூறியுள்ளார்.

**இனியவை நாற்பதில் கல்வி**

இனியவை நாற்பது, இன்னா நாற்பது போன்ற நூல்களிலும் கல்வி பற்றிய கருத்துக்களை பூதஞ்சேந்தனாரும் கபிலரும் கூறுவதை,

**பிச்சைபுக் காயினும் கற்றன் மிகவினிதே**
**நற்சவையிற் கைக்கொடுத்தல் சாலவு முன்னிதே (இனியவை நாற்பது பா.எண் 1)**
**கல்லாதா னூருங் கலிமாப் பரிப்பின்னா**
**வல்லாதான் செல்லு முறையின் பயனின்னா**
**இல்லார்வாய்ச் சொல்லி மைமின்னா வாங்கின்னா (இனியவை நாற்பது பா.எண் 28)**

பிச்சையெடுத்துண்டாயினும் கற்றல் மிக இனிது. அங்ஙனம் கற்ற நல்ல கலையின்கண் தமக்கு உதவுதல் மிகவும் முட்பட இனிது எனவும், நடத்த வேண்டிய முறையை கல்லாதவன் ஏறிச் செலுத்தும் மனச் செருக்கிய குதிரை அவனைச் சுமர்ந்து செல்:லுதல் துன்பத்தைத்தரும். கல்வி இல்லாதவன் சொல்லுகின்ற சொல்லின் பொருள் துன்பத்தைத்தரும். செல்விமில்லாதவனுடைய வாயிலிருந்து வரும் சொல்லானது நயமானது துன்பம்.

திரிகடுகத்தில் கல்வி

கல்வியில்லாதவன் கற்றவர் அவையில் ஒன்றைக் கூறுதல் துன்பம் தரும் என்று கல்வி உயர்வு பற்றி கூறப்படுகிறது.

**ஙண்மொழி நோக்கிப் பொருள்கொளலும் நூற்கேலா**
**வெண்மொழி வேண்டினுஞ் சொல்லாமை நன்மொழியைச்**

**Academic Research News**
*Peer-Reviewed Journal*

15

கல்வி ஆராய்ச்சி செய்திகள்
(Kalvi Ārāycci Ceytikaḷ)
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*

**Volume 1, Issue 2, December 2023** **E-ISSN – XXXX-XXXX**

**இற்றின மல்லாக்கட் சொல்லும் இம்;மூன்றும்**
**கற்றறிந்தார் பூண்ட கடன் (திரிகடுகம் பா.எண் 31)**

நூல்களில் சொற்களை ஆராய்ந்து நுட்பமாகியப் பொருள்களைக் கொள்;ளுதலும் நூல்களுக்கு தகாத பயனற்ற சொற்களை பிறர் விரும்பினாலும் சொல்லாதொழிதலும் உயிர்க்கு உறுதி கொடுக்கும் நல்ல சொற்களை கீழ்குலம் ஆகாதவரிடத்து சொல்லுதலும் ஆகிய இம்மூன்றும் பழமையான நூல்களையும் படித்தறிந்தவர் மேற்கொண்ட கடமையாகும் என்று கல்வியின் சிறப்பை நல்லாதனார் குறிப்பிடுகின்றார்.

**ஆசாரக்கோவையில் கல்வி**

**நன்றி யறிதல் பொறையுடைமை யின்சொல்லோ**
**யின்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோ**
**ஒப்புர வாற்ற வறித அறிவுடைமை**
**நல்லினத் தாரோடு நட்ட விவை யெட்டும்**
**சொல்லிய ஆசார வித்து (ஆசாரக்கோவை பா.எண் 1)**

பெருவாயின் முள்ளியார் இயற்றிய ஆசாரக்கோ்வியில் தினக்கு பிறர் செய்த நன்றியை மறவாமையும், பொறுமையும், இன்சொல்லும் எல்லா உயிர்க்கும் துன்பத்தை தருபவற்றை செய்யாதிருத்தலும் கல்வியும் ஒப்புரவை மிக அறிதலும் அறிவுடைமையும் நல்ல இயல்புடையவர்களுடன் நட்புச் செய்தலும் என்ற கல்வி சார்ந்த இயம்பியுயள்ளார்.

முதுமொழிக் காஞ்சியில் கல்வி

மதுரை கூடலூர் கிழார் இயற்றிய முதுமொழிக் காஞ்சியில் கல்வியின் முக்கியத்துவத்தை,

**ஆர்கலி உலகத்து மக்கட கெல்லாம்**
**ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை (முதுமொழிக் காஞ்சி பா.எண் 1)**
**மேதையிற் சிறந்தன்று கற்றவை மறவாமை (முதுமொழிக் காஞ்சி பா.எண் 3)**
**கற்றலிற் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று (முதுமொழிக் காஞ்சி பா.எண் 8)**

என்பதை இப்பாடல்களின் வழி அறியமுடிகின்றது.

**முடிவுரை**

நம்முடைய தாய்மொழியாகிய தமிழ் மொழி, முதன்மொழி, மூத்தமொழி, இலக்கிய - இலக்கண வளங்களை மிகுதியாகக் கொண்ட மொழி. உலக மொழிகள் ஆராயிரம் அவற்றுள் இன்று வாழ்ந்து கொண்டிருப்பது மூவாயிரம் மட்டுமே ஆகும். இலக்கியங்களை வகைமைப்படுத்தும் போது சங்க இலக்கியம் தொடங்கி இன்றைய அளவிலும் வளர்ந்த வண்ணமே உள்ளது. சங்க இலக்கியத்திற்கு அடுத்த நிலையில் பதினெண் கீழ்கணக்கு நூல்கள் பேசப்படுகிறது. இந்நூல்களில் கல்வியியல் சிந்தனைகள் பற்றி பல பாடல்களின் வாயிலாக இக்கட்டுரை வழி அறிய முடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**

[1] எஸ். கௌமாரீஸ்வரி – *பதினெண்கீழ்கணக்கு நூல்கள் மூலமும் உரையும்*, சாரதா பதிப்பகம், சென்னை-14.

[2] *நாலடியார் மூலமும் உரையும்*, சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை,முதல் பதிப்பு, சென்னை-14.

[3] *திருவள்ளுவர் (பரிமேலழகர் உரை)*. ஸ்ரீசெண்பகா பதிப்பகம், தியாகராய நகர், சென்னை.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.